தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2024

**8 வயதுப்பிரிவு**
(01.01.2016 – 31.12.2016 வரையில் பிறந்தோர்)

## ஆழிப்பேரலை

2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் நாளில் ஆழிப்பேரலை தாயகத்தில் தன் கோரத்தாண்டவத்தை ஆடிச்சென்றது. ஆண்டுகள் இருபது கடந்தாலும் அது தந்த வலிகளை எம்மால் மறந்துவிட முடியாது.

தமிழீழத்தில் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களின் கரையோர ஊர்களை ஆழிப்பேரலை தாக்கியது. அள்ளித் தந்த கடலன்னை, சில நொடிப் பொழுதுகளில் கொத்துக் கொத்தாய் எம் உறவுகளின் உயிர்களையும் உடைமைகளையும் அள்ளிச் சென்றாள்.

ஆனாலும், அடுத்த நொடியே எம் மண்ணில் மீட்புப்பணி தொடங்கியது. கடற்புலிகள் களத்தில் இறங்கினர். முன்னரங்க காவல் கடமையில் நின்ற படையணிகள் தவிர அனைத்துப் படைப்பிரிவுகளிலிருந்தும் நிர்வாகங்களிலிருந்தும் மீட்புப் பணிக்காய் போராளிகள் களமிறக்கப்பட்டனர்.

எஞ்சிய எம் உறவுகளைக் காப்பாற்றுவதிலும், இறந்தவர்களைத் தேடித்தேடி எடுப்பதிலும் போராளிகள் பகலிரவாய் செயற்பட்டனர். மக்களுக்குத் தேவையான மருத்துவப் பணிகளையும் விரைந்து செய்தனர். மீன்பிடித்தலே இந்த மக்களின் வாழ்வாதாரம். அதனால், இவர்களுக்கான படகுகளை கடற்புலிகள் மீளமைத்துக் கொடுத்தனர்.

பேரிடரை எதிர்கொண்ட மக்களை ஆற்றுப்படுத்தி, அவர்களை இயல்பு நிலைக்குத் திரும்ப வைத்து, அவர்களின் வாழ்வுக்கு ஒளியேற்ற உழைத்த அனைவரது உழைப்பையும் தலைவணங்கி நிற்கின்றோம்.

நன்றி,

வணக்கம்.